



முனைவர் இரா. ஆனந்தகுமார். இ.ஆ.ப.

முனைவர் இரா. ஆனந்தகுமார் இ.ஆ.ப
தொடர்பு கொள்ள / கருத்து தெரிவிக்க
email. tmbkianand@gmail.com

# வைரல் ஆன சமையல்

பொதுவாக சமையல் என்பதும் கால்பந்து விளையாட்டுப் போல ஒரு 'தவம்' தான் என்று சொன்னால் ஒப்புக்கொள்ளும் மனப்பாங்கு இன்று வந்துள்ளது.

காலையில் நல்லா தளத்தள என்று துளிர்விட்டுக்கொண்டிருந்த பிரண்டை, தூதுவளை ஆகியவற்றை கத்திரிக்கோலில் வெட்டி உடனே அவற்றை நசுக்கி... கபசுர குடிநீர் பொடி உட்பட... பல பொடிகளைச் சேர்த்து ஒரு இரசம் வைத்தோம் பாருங்கள்... உப்பு போட மறந்திருந்தாலும் மனம் முழுக்க மணத்தால் நிறைந்தது.

வழக்கமாக சமைக்க வருகிற கிருஷ்ணம்மாள் பாட்டி, கொரோனா, காரணமாக அச்சத்தால் இரண்டு நாட்கள் விடுமுறை எடுத்தேன், என்ற பொழுது,

‘தாராளமாக, முழு சம்பளத்தோடு நீங்கள், மொத்த நாட்களுமே எடுத்துக்கொள்ளலாம்‘ என்று சொல்லிவிட்டு...

அதில் உள்ள நன்மையாக...

‘நம்மால் இந்தக் காலகட்டத்தில் சமையல் கற்றுக்கொள்ள முடியும்’.

என்று முடிவு செய்தோம்.

அப்போது தெரியாது... மொத்த நாட்களும்... பாட்டி வரப்போவதில்லை. அது மட்டுமல்ல, தானே அங்கு இருக்கப்போவதில்லை, என்று கதிரேசனுக்கு.

கால்பந்து விளையாட பத்து பேர் துணை வேண்டும் சமையலில் தனியாகவே விளையாடலாம்... குக்கரைத் தேடினால் அது கிடைத்தது. ஆனால் மூன்று மூடிகள் இருந்தது... அதன்பிறகு அந்த மூன்று மூடிகளில் இருந்த வெய்ட்டுகளை கழட்டி ஆராய்ந்ததில் கிரிக்கெட்டில் வலது இடது கால் காப்புக்களை மாற்றிக் கட்ட முடியாதல்லவா? அந்த மாதிரி எந்த வெயிட்டை எந்தக் குக்கரின் மூடியில் மாட்டுவது? என்று குழப்பம் ஆகிவிட்டது.

குக்கர்களை அடுப்புக்குக் கீழே! அடுப்பு கண்டுபிடித்த காலத்தில் இருந்து திறக்காத, அலமாரிக்குள்ளிருந்து எடுத்ததால் அங்கேயிருந்து கால்பந்து பந்து பாஸ் பண்ணும் பொழுது அங்குமிங்குமாக ஓடுவது போல... கரப்பான் பூச்சிகள் ஓடின... அவற்றைப் பிடித்துத் தட்டிவிட மெஸ்ஸி கால்களைத் திருப்புவது போல கைவிரல்களோடு கால்பந்தாடிக் கொண்டிருந்த பொழுதுதான் மணி எட்டரையாவது மனதுக்குள் எட்டியது.

ஆஃபிஸ் போகணுமே... என்று ஏதாவதொரு வெய்ட்டை எதாவதொரு மூடியில் மாட்டி அரிசியைப் போட்டு நாலு மடங்கு தண்ணீர் ஊற்றி... அடுப்பில் வைத்தால்... மூடி... கால்பந்து சைஸிலும் குக்கர் முனை கிரிக்கெட் பந்து சைஸிலும் இருந்தது உணர முடிந்தது...

உடனே அதிலிருந்து அரிசியோடு... ஒரு செட் புது குக்கர் புது மூடி இரண்டையும் மறுபடி தேர்வு செய்து தயார்செய்து ட்ரான்ஸ்பர் செய்து கரெக்டான வெய்ட்டைப் போட்டு... அடுப்பில் ஏற்றினால்... கொஞ்ச நேரத்தில் அந்த மூடியிலிருந்த எமெர்ஜென்ஸி ஓட்டை வழியாக நீராவி புஸ் என்று போனது... அந்தக் குக்கர் ரிப்பேரான மூடியுடன் இருந்திருக்கிறது. அதனால்தான் பத்மினி அதை ஒதுக்கி வைத்திருந்திருக்கிறார்...

அடக்கடவுளே !

எவ்வளவு விக்கெட்டை இழந்தாலும்... மேட்ச்சை விட்டுவிட கூடாது என்று ஒரு வைராக்கியம் வருமே... அதே மாதிரி... ஒரு வைராக்கியத்துடன் ஆரம்பித்த சமையலை அம்போ என்று நடுவிலே விட்டுவிடாமல்... சமாளித்து... கொண்டு வந்து பதினைந்து மூலிகைகள் கொண்ட ரசத்தை காலை மதிய உணவாக... அரிசிச் சோற்றில் ஊற்றி அடித்தபொழுது... ஒரு கால்பந்தாட்டத்தில் வென்ற அளவு திருப்தி வந்தது என்னவோ நிஜம்தான்!

ஆனால் அந்த இரசத்தை.... இரசம் என்று கதிரேசனால் மட்டுமே ஒப்புக்கொள்ள முடிந்திருக்கும்... இப்படியாக ஆட்டம் ஆரம்பித்து “யானைப் பசிக்கு சோளப்பொறியா”? என்பார்கள்... அதுபோல கொஞ்சம் கொஞ்சமாக தொடங்கிய சமையல்... யானைக்கே சமைக்கிற அளவு போன கதையெல்லாம் இனி வர இருக்கிறது...

வாருங்கள் பார்க்கலாம்.